செய்தி வெளியீடு எண்: 768 நாள்: 12.06.2024

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று (12.06.2024) துறையின் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது நீர்வளத்துறையின் மூலம் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் குறிப்பாக தடுப்பணைகள் மற்றும் அணைக்கட்டுகள் கட்டுமானம் செய்தல் பல்வேறு நீர் ஆதார கட்டுமானங்களில் மேற்கொள்ளப்படும் புனரமைக்கும் பணிகள் மற்றும் பருவ மழைக்கு முன் காவேரி டெல்டா படுகையில் சிறப்பு தூர்வாரும் பணிகள் போன்ற அனைத்து பணிகளும் போர்க்கால அடிப்படையில் முழுவதுமாக செய்து முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

கடந்த 12/2023 அன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களை தாக்கிய மிக்ஜாம் புயல் காரணமாகவும், தென் மாவட்டங்களில் பெய்த வரலாறு காணாத அதீத கன மழை காரணமாகவும் நீர்நிலை கட்டுமானங்களில் ஏற்பட்ட சேதங்களை சீரமைக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நிரந்தர வெள்ள சீரமைப்பு பணிகளை விரைந்து முடித்திடவும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், பருவ மழை காலங்களில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் அணைகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளை தொடர்ந்து கண்காணித்திடவும் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் திரு தென்காசி சு ஜவகர், இ.ஆ.ப., அரசு கூடுதல் செயலாளர் திருமதி சு. மலர்விழி, இ.ஆ.ப., அரசு சிறப்புச் செயலாளர் திரு கா. முருகன், காவேரி தொழில்நுட்ப குழுமத்தின் தலைவர் திரு ஆர். சுப்ரமணியன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு கு. அசோகன் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu